# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 600019/2019

Deposition of Lw1 examined as Pw1 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | செந்தில்குமார் |
| Father's Name | இளங்கோவன் |
| Village | மயிலாடுதுறை |
| Age | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26

( A1 to A2 present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கேபிள் டிவி ஆப்ரேட்டராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2017 ம் ஆண்டு மாதம், தேதி நினைவில் இல்லை. ஒருநாள் காலை 08.45 மணி அளவில் ஆஜர் எதிரிகள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் சிமெண்ட் சிலாப்போட்டபோது எங்களுடைய மாடிப்படிக்கு செல்லும் பாதையில் அந்த சிமெண்ட் சிலாப் போட்டார்கள். அப்போது நிறைய பேர் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஏன் எங்கள் மாடிப்படிக்கு செல்லும் பாதையில் சிமெண்ட் சிலாப் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு என்னை கெட்டவார்த்தைகளால் திட்டி கட்டையால் தாக்கினார்கள் கூட்டமாக இருந்ததால் யார் மேற்படி செயலை செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து சம்பந்தமான வழக்கு நிலுவையில் இருந்ததால் எதிரிகள் தான் மேற்படி செயலை செய்திருப்பார்கள் என்று புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. **(புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டேன் என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் மீது மேல் நடவடிக்கை எடுக்கவிரும்பவில்லை என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 14.12.2017 ம் தேதி காலை 08.45 மணி அளவில் 1ம் எதிரி தனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட இடத்தை விற்று விட்டார். அந்த

இடத்தில் ஆட்கள் காம்பவுண்ட் போடுவதற்காக வந்திருந்தார்கள். அவர்களிடம் நான் 1ம் எதிரியை வரச்சொல் அவரிடம் இந்த பிரச்சனைக்குரிய இடத்தை ஏன் விற்றார் என்று கேட்கவேண்டும் என்று சொன்னேன் என்றும், 1ம் எதிரி சம்பவ இடத்திற்கு வந்த போது அவரிடம் நாங்கள் கேட்டதற்கு எதிரிகள் இருவரும் என்னை கெட்ட வார்த்தைகளால் திட்டி கட்டையால் தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் மேற்படி குற்ற சம்பவம் குறித்தான புகார் வாக்குமூலத்தினை கொடுத்து விட்டு போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

3/3/26

நீதித்துறை நடுவர் எண் 1,
மயிலாடுதுறை

DEPOSITION OF WITNESS

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC.NO. 600019/2019

Deposition of Lw2 examined as Pw2 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | இளங்கோவன் |
| Father's Name | ராமசாமி |
| Village | மயிலாடுதுறை |
| Age | 72/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26
( A1 to A2 present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கேபிள் டிவி ஆப்ரேட்டராக பணி புரிந்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2017 ம் ஆண்டு மாதம், தேதி நினைவில் இல்லை. ஒருநாள் காலை 08.45 மணி அளவில் ஆஜர் எதிரிகள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் சிமெண்ட் சிலாப் போட்டபோது எங்களுடைய மாடிப்படிக்கு செல்லும் பாதையில் அந்த சிமெண்ட் சிலாப் போட்டார்கள். அப்போது நிறைய பேர் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஏன் எங்கள் மாடிப்படிக்கு செல்லும் பாதையில் சிமெண்ட் சிலாப் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு எங்களை கெட்டவார்த்தைகளால் திட்டி எனது மகனான அ.சா.1 ஐ கட்டையால் தாக்கினார்கள் கூட்டமாக இருந்ததால் யார் மேற்படி செயலை செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து சம்பந்தமான வழக்கு நிலுவையில் இருந்ததால் எதிரிகள் தான் மேற்படி செயலை செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அ.சா.1 ஆன எனது மகன் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 14.12.2017 ம் தேதி காலை 08.45 மணி அளவில் 1ம் எதிரி தனக்கு பாகமாக ஒதுக்கபட்ட இடத்தை விற்று விட்டார். அந்த இடத்தில் ஆட்கள் காம்பவுண்ட் போடுவதற்காக வந்திருந்தார்கள். அவர்களிடம் அ.சா.1 1ம் எதிரியை வரச்சொல் அவரிடம் இந்த பிரச்சனைக்குரிய இடத்தை ஏன் விற்றார் என்று கேட்கவேண்டும் என்று சொன்னேன் என்றும், 1ம் எதிரி சம்பவ இடத்திற்கு வந்த போது அவரிடம் நாங்கள் கேட்டதற்கு எதிரிகள் இருவரும் எங்களை கெட்ட வார்த்தைகளால் திட்டி அ.சா.1 ஐ கட்டையால் தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் மேற்படி சம்பவ

சமயத்தில் உடன் இருந்தேன் என்றும் போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை

R. G.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

3/3/20

நீதித்துறை நடுவர் எண். I

[illegible]

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 600019/2019

Deposition of Lw3 examined as Pw3 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | கல்யாணி |
| Father's Name | இளங்கோவன் |
| Village | மயிலாடுதுறை |
| Age | 62/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26

( A1 to A2 present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். அ.சா.2 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2017 ம் ஆண்டு மாதம், தேதி நினைவில் இல்லை. ஒருநாள் காலை 08.45 மணி அளவில் ஆஜர் எதிரிகள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் சிமெண்ட் சிலாப் போட்டபோது எங்களுடைய மாடிப்படிக்கு செல்லும் பாதையில் அந்த சிமெண்ட் சிலாப் போட்டார்கள். அப்போது நிறைய பேர் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஏன் எங்கள் மாடிப்படிக்கு செல்லும் பாதையில் சிமெண்ட் சிலாப் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு எங்களை கெட்டவார்த்தைகளால் திட்டி எனது மகனான அ.சா.1 ஐ கட்டையால் தாக்கினார்கள் கூட்டமாக இருந்ததால் யார் மேற்படி செயலை செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து சம்பந்தமான வழக்கு நிலுவையில் இருந்ததால் எதிரிகள் தான் மேற்படி செயலை செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அ.சா.1 ஆன எனது மகன் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 14.12.2017 ம் தேதி காலை 08.45 மணி அளவில் 1ம் எதிரி தனக்கு பாகமாக ஒதுக்கபட்ட இடத்தை விற்று விட்டார். அந்த இடத்தில் ஆட்கள் காம்பவுண்ட் போடுவதற்காக வந்திருந்தார்கள். அவர்களிடம் அ.சா.1 1ம் எதிரியை வரச்சொல் அவரிடம் இந்த பிரச்சனைக்குரிய இடத்தை ஏன் விற்றார் என்று கேட்கவேண்டும் என்று சொன்னேன் என்றும், 1ம் எதிரி சம்பவ இடத்திற்கு வந்த போது அவரிடம் நாங்கள் கேட்டதற்கு எதிரிகள் இருவரும் எங்களை கெட்ட வார்த்தைகளால் திட்டி அ.சா.1 ஐ கட்டையால் தாக்கி சொறப்பகாயத்தை ஏற்படுத்தினார்கள்

E-kalyani

என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் மேற்படி சம்பவ சமயத்தில் உடன் இருந்தேன் என்றும் போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை

x E. Kalyan

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதி
பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்
காட்டப்பட்டு அவரால் சரியானதென்று
ஏற்கப்பட்டது

3/3/26

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை